**தலைப்பு 231 – கடன் இணக்கச்சபை திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கடன் இணக்கசபைத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இந் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் இணக்கசபைத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவிடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) சென்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப்பாய்ச்சல் கூற்று

**(அ) வருமானமல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கை களிலிருந்து கிடைக்கப் பெற்ற காசுப் பாய்ச்சலின் கீழ் ரூபா 30,319 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | செயற்பாட்டு நடவடிக்கை களிலிருந்து கிடைக்கப் பெற்ற, காசுப் பாய்ச்சல் கூற்றில் ஏனைய பெறுவனவுகள் ரூபா 30,318.51 தவறுதலாக குறைவாக பதியப்பட்டுள்ளது. | சரியான பெறுமதியினை காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்படல் வேண்டும். |

**(ஆ) தனிநபர் ஊதியங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தனிநபர்களுக்கான ஊதியங்கள் மற்றும் நடவடிக்கை கொடுப்பனவுகள் ரூபா 19,476,169 காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 19,453,489 ஆக காட்டப்பட்டிருந்த மையினால் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான காசுபாய்ச்சல் ரூபா 22,680 ஆல் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் தனிநபர் ஊதியங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் பதியப்பட வேண்டியிருந்த போதிலும் நேர்ந்த தவறுதல் காரணமாக அவ்வாறு பதியப்படாமையினால் காசுப் பாய்ச்சல் ரூபா 22,680 ஆல் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியினை காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களில் உள்ள ரூபா 58,468 க்கான பொறுப்புக்களின் விபரம் திறைசேரிக்கு முறையாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | கைத்தவறினால் நேர்ந்த இத்தவறினை எதிர்காலத்தில் நேரா வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | சகல பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களையும் திறைசேரிக்கு முறையாக அறிவிக்கப்படல் வேண்டும். |

### 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழுள்ள விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சட்டமூலத்தின் 38(ஊ) பிரிவின் படி உள்ளக கணக்காய்வு செயற்பாட்டினை பயனுள்ள முறை ஒன்று இருப்பதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையில் 5.1 பிரிவில் உள்ள அவதானிப்பின் படி அத்தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த திணைக்களத்தினுள் உள்ளக கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டில்லாததுடன் நீதி அமைச்சின் உள்ளக கணக்காய்வு அலகின் மூலமாக உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்ட மூலத்தின் 38(ஊ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 135(4) | நிதிசார் அதிகாரங்களை வழங்குவதை உரிய முறையில் இற்றைப் படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கடமைக்கு சமூகமளிக்காமையினை சரி செய்யும் பொருட்டுக்கான ஏற்பாடுகள் 2021 வருடத்திற்கான நிதிசார் அதிகாரங்களை வழங்குவதற்கான அட்டவணையினை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணம் 135(4) பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2017 யூன் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2017 கொண்ட நிதி மற்றும் மக்கள் ஊடக அமைச்சின் சொத்துக்களின் முகாமைத்துவ த்திற்கான சுற்றறிக்கை | நிதிசாரா சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கொம்ட்ரோலர் அதிபதி காரியாலயத்திற்கு சமர்க்கப்பட்டிருக்க வில்லை. | 2018 வருடம் முதல் இதுவரையிலும் கொள்வனவு செய்யப்பட்ட நிதிசாரா சொத்துக்களை கொம்ட்ரோலர் அதிபதி காரியாலயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட விடயத்திற்கு பொறுப்பான அதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2.4 முற்பணம் செலுத்தல் மற்றும் சரி செய்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| காரியத்தினை முடித்த உடன் பெற்றுக் கொள்ளப்பட்ட உரிய காரியத்திற்கான உபகட்டு நிதியினை சரி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மொத்தம் ரூபா 40,000 திற்கான 03 முற்பணத்தினை 70 நாள் முதற் கொண்டு 338 நாள் வரை தாமதப்படுத்தப்பட்டு கட்டி முடிக்கப்பட்டிருந்தது. | 2020.10.09 நாளன்று பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 20,000.00 க்கான முற்பணத்தினை 2020.12.18 நாள் முடிக்கப்பட்டுள்ளதுடன் கொவிட் 19 தொற்று காரணமாக நாட்டினுள் நிலவிய நிலமையினால் 2020 நவம்பர் மாதத்தினுள் திணைக்களத்தின் கருமங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மையினால் அம்முற்பண சரி செய்தல் தொடர்பான காரியங்கள் மேற்கொள்வதற்கு தாமதமாகி உள்ளன. | உரிய முறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட உரிய அலுவலுக்கான உப கட்டுநிதி முடிக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அசையாச் சொத்துக்கள் மீது பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் கொடுக்கல் வாங்கலினால் பாதிப்புக்குள்ளானவர்கள் அக்கடன் பளுவிலிருந்து மீட்சி பெறுவதற்கு நிவாரண செயல் திட்டமொன்றினை தயாரிப்பதற்காக போதியளவிலான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று இது தொடர்பாக மக்களை அறிவுறுத்தும் முகமாக போதிய வேலைத்திட்ட மொன்றாவது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் சேவையினை விஸ்தரிக்கும் நோக்குடன் மீளாய்வு ஆண்டினுள் கம்பஹா, காலி, குருணாகல் மற்றும் கொழும்பு நகரங்களை மையப்படுத்தி 04 கிளை சபைகளை அமைப்பதற்கு உத்தேசித்திருந்ததுடன் கொவிட் 19 தொற்று காரணமாக கிளை சபைகளை அமைக்கும் வேலை இயலாது போயிற்று. ஆயினும் 2021 வருடம் அக்கிளைகளை அமைப்பது தொடர்பான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | திணைக்களத்தின் முக்கிய நோக்கமாக அசையா சொத்துக்கள் மீது கடன்பட்டோரினது கடன் பளுவினை மீட்டு கொடுப்பதற்காக போதிய அளவிலான திட்டமொன்றினை தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.2 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய இலக்கம் 01/2014 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயற்பாட்டு திட்டத்தினை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய இலக்கம் 01/2014 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வு ஆண்டினுள் வருடாந்த செயலாற்றுகை திட்டத்தினை தயாரிக்கும் போது அதனை கைத்தவறுதலாக பிழையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இத்தவறினை சரி செய்யப்படுவதுடன் வருடாந்த செயலாற்றுகை திட்டத்தினை தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய இலக்கம் 01/2014 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.3 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 வருடத்தில் பதிவான 1301 வழக்குகளில் 507 ஐ முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 222 வழக்குகள் மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தன. | கொவிட் 19 தொற்று காரணமாய் நாட்டினுள் நிலவிய நிலமையினால் கடன் இணக்கப்பாட்டு சபையின் விசாரிப்பு செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படாததுடன் ஓர் ஆண்டினுள் தீர்க்கப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையினை குறைவதற்கு அது காரணியாக இருந்தது. ஆயினும், 2021 வருடத்தினுள் கிளை சபைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் | திணைக்களத்தின் செயலாற்றுகையினை விருத்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு வருவதால் 2021 வருடத்தினுள் தீர்க்கப்படும் விண்ணப்ப எண்ணிக்கையினை விருத்தி செய்து கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக அறியத் தருகின்றேன். | |

**3.4 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தியின் படி அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டிக் கோவை இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் படி வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் வரைவு ஒன்றினை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு இயலாது போனதனால் நேர்ந்த தாமதத்தினால் 2019 வருடத்திற்கான செயலாற்றுகை அறிக்கையினை தயாரித்து இதுவரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு இயலாது போயிற்று. தற்போதைக்கு 2019 வருடத்திற்கான செயலாற்றுகை அறிக்கை அச்சில் இருப்பதனை தயவு கூர்ந்து அறியத் தருகின்றேன். | அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தியின் படி செயற்பட வேண்டும். |

**3.5 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பெறுகை திட்டத்திற்கு உட்படாத ரூபா 105,840 பெறுமதியுள்ள 04 பெக்ஸ் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. | கொள்வனவுகள் இயன்ற அளவில் பெறுகை திட்டத்துடன் இணங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பெறுகை திட்டத்தின் படி மடிக் கணனி கொள்வனவு செய்வதற்கு ரூபா 450,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக ரூபா 900,188 செலவு செய்யப்பட்டிருந்தது. | மடிக் கணனியினை கொள்வனவு செய்வதற்காக பெறுகை திட்டத்தில் ரூபா 450,000 மாத்திரம் இருந்த போதிலும் நிலவிய தேவைப்பாடு காரணமாக அதற்காக ரூபா 900,188 செலவிடப்பட்டது. | பெறுகை திட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

**3.6 அரச உத்தியோகத்தர் பிணை வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அரச உத்தியோகத்தரின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய 05 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அவ் உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு செயற்பாட்டினை துரிதமாய் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | நிதிப் பிரமாணத்தின் படி உத்தியோகத்தர் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கிணங்க செயற்பட வேண்டும். |

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிளை சபைகளை அமைப்பதற்கான ஒதுக்கீடு கிடைக்காதிருந்த போதிலும் அதற்காக ரூபா 1,174,028 செலவிட்டு 5 மடிக் கணனிகள், 07 அச்சு இயந்திரங்கள் மற்றும் 4 பெக்ஸ் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அக்கிளைகள் அமைக்கப்படாதிருந்தமையினால் அவ் உபகரணங்கள் செயற்படாதிருந்தன. | கடன் இணக்கப்பாட்டு சபையின் கிளைச் சபைகளை அமைப்பதை 2020 வருடம் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2020 வருடத்தினுள் அமுலாக்கப்பட்ட இடை நிலை அங்கீகரித்த கணக்குகளின் படி கிளை சபைகளுக்காக தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு தேவையான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட போதிலும் கிளை சபைகளை அமைத்து | ஒதுக்கீடுகள் திட்டமிடப்பட்ட காரியங்களுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அமுல்படுத்துவதற்கு போதுமான அளவு ஒதுக்கீடு கிடைக்கப் பெறவில்லை. மேலும் கொவிட் 19 தொற்று காரணமாக நாட்டினுள் நிலவிய நிலமையினால் எதிர்பார்த்தபடி கிளை சபைகளை அமைப்பதற்கு முடியாது போயிற்று. கிளை சபைகளை துரிதமாக அமைப்பது அத்தியாவசியமாக இருப்பதனால் 2020 வருடத்தில் உள்ள ஒதுக்கீட்டிலிருந்து கிளை சபைகளுக்கான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. 2021 மே மாதமாகும் போது கிளை சபைகளை அமைப்பதற்கு எதிர்பார்க்கப் படுகின்றதென்பதனை அறியத் தருகின்றேன். | |

**4. பேண்தகு அபிவிருத்தி குறிக்கோளினை அடைந்து கொள்ளல்**

---

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பேண்தகு அபிவிருத்தி குறிக்கோளினை அமுல்படுத்துவதற்காக நிறுவனத்தின் பொறுப்புடன் தொடர்பு கொள்ளும் ஆர்வமுள்ள தரப்பினரை இனங்கண்டிருந்த போதிலும் அத்தரப்பினர் மீது அறிவுறுத்தும் வேலை திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் சேவையினை விஸ்தரிக்கும் நோக்குடன் மீளாய்வு ஆண்டினுள் கம்பஹா, காலி, குருணாகல் மற்றும் கொழும்பு நகரங்களை மையப்படுத்தி 04 கிளை சபைகளை அமைப்பதற்கு உத்தேசித்திருந்ததுடன் கொவிட் 19 தொற்று காரணமாக கிளை சபைகளை அமைக்கும் வேலை இயலாது போயிற்று. ஆயினும், 2021 வருடம் அக்கிளை சபைகளை அமைப்பது | பேண்தகு அபிவிருத்தி குறிக்கோளினை அமுல்படுத்துவதற்காக அக்கறை காட்டும் தரப்பினரை இனங்கண்டு அறிவுறுத்தும் செயற்திட்டங்களை செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொடர்பான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை அறியத்தருகின்றேன். | |

**5. நல்லாட்சி**

**5.1 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2020 ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இத்திணைக்களத்தினுள் உள்ளக கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டில்லாததுடன் நீதி அமைச்சின் உள்ளக கணக்காய்வு அலகின் மூலம் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(1) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**6. மனிதவளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இயல்பான சேவை மட்டத்தினை பேணுவதற்கு மற்றும் ஊழியர் எண்ணிக்கையினை பற்றிய காலரீதியான மீளாய்வினை மேற்கொள்ளாததன் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டங்களிலான 08 வெற்றிடங்கள் நிலவின. | இத்திணைக்களத்தின் இலக்கம் 3/1/6 மற்றும் 2019.11.27 திகதியுடனான தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்பித்தரும்படி ஒன்றிணைப்பு சேவைகள் பணிப்பாளர் அதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் பதில் கிடைக்கப் பெறவில்லை. திணைக்களத்தின் 3/1/14 மற்றும் 2021.03.15 திகதியுடனான அலுவலக ஊழியர் சேவையின் வெற்றிடங்கள் மற்றும் சாரதி | அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, பணிப்பாளர், பல்காரிய அபிவிருத்தி செயலாற்றுகை படையணிக்கு வேண்டுகோள் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2018 முதல் இதுவரையில் இந்த மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை தயாரிக்கப்பட்டில்லாததுடன் 2021 வருடத்திற்கான மனிதவள திட்டத்தினை தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |